12th February 1959]

*273 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) போலீஸ் நாய்கள் குற்றங்களைக் கண்டு பிடிக்க 1958–ல் எத் தனை தடவை பயன்படுத்தப்பட்டன ?

(ஆ) பயிற்சி பெற்ற நாய்கள் எத்தனை உள்ளன?

(இ) வேறு ராஜ்யங்களுக்கு நமது நாய்கள் கொடுக்கப்பட்டுள்ளனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) On 165 occasions.

(*b*) Seven:

(*c*) Yes, Sir.

SRI M. P. SARATHI : வேலூரில் போலீஸ் பயிற்சி நிலையம் இருப்ப தால் அங்கே ஏதாவது துப்பு அறியும் நாய்களை வைக்க சர்க்கா ருக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அது ஒரு முக்கியமான இடம். அப்படிப்பட்ட யோசனை ஏதாவது சர்க்காரிடம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேலூரில் போலீஸ் காரர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கிறார்கள். துப்பு அறியும் நாய்களுக்கு அங்கே பயிற்சி கொடுக்கப்படுவது இல்லை.

SRI M. JAGANNATHAN : As far as my information goes, detection of crimes by using the police dogs is not scientific and proper. It always ends in pointing out the wrong persons. In view of this will the Government consider the desirability of giving up the system of using police dogs as such for the investigation of crimes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not agree with the hon. Member but still if the hon. Member has made serious researches on this subject he may communicate his results of research to me. Then I shall have it looked into.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த துப்பறியும் நாய்கள் உண் மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கிறதோ அல்லது தவறு செய்கி றதோ அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் நாய்கள் கண்டு பிடித்து சாட்சிகள் இல்லை என்ற காரணத்தால் குற்றவாளியின் பேரில் கேஸ் போடாமல் விட்டு விட்டார்கள். ஆனால் அந்த நாய்கள் குற்றவாளியைக் கண்டு பிடித்த காரணமாக கொலையுண்டவர்களுடைய தாய் தந்தையர்கள் சில மாதங்களுக்கு முன்னதாக கொலை செய்தவனை பட்ட பகலில் துணிந்து வெட்டிப் போட்டுவிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் சமீபத்தில் நடந்தது. நாய் கண்டுபிடித்தும் குற்றவாளியின் பேரில் கேஸ் போடாத தன் காரணமாக இப்படிப்பட்ட சம்பவங்களும் நடைபெறுகின்றன. நாய்கள் கண்டு பிடித்தும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன். இதைப்பற்றியும் சர்க்கார் கவனிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்படிப்பட்ட நாய்கள் ரொம் பவும் "உபயோககரமாகஇருக்கிறது" என்று தான் அதை உபயோகிக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். நாய்கள் குற்றவாளிகளை கண்டு பிடித்தாலும் அதற்கு மேல் போலீஸ்காரர்களும் கொஞ்சம் புலன் விசாரிக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி புலன் கண்டு பிடிக்க முடியவில்லையென்றால் கேஸ் போடுவது கஷ்டமாகத்தான் இருக்கும். அது வேறு விஷயம்.